செய்தி வெளியீடு எண் :1070 நாள்: 29.06.2022

**<u>செய்தி வெளியீடு</u>**

**வேலூர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் வேலூர் புதிய பேருந்து நிலையம் உள்ளிட்ட ரூ.62.10 கோடி செலவிலான 17 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, ரூ.32.89 கோடி மதிப்பீட்டிலான 50 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 30,423 பயனாளிகளுக்கு ரூ.360.53 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகள் – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (29.6.2022) வேலூர் மாவட்டம், கோட்டை மைதானத்தில் நடைபெற்ற அரசு விழாவில், வேலூர் புதிய பேருந்து நிலையம் உள்ளிட்ட ரூ.62.10 கோடி செலவிலான முடிவுற்ற 17 பணிகளை திறந்து வைத்து, ரூ.32.89 கோடி மதிப்பீட்டிலான 50 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 30,423 பயனாளிகளுக்கு ரூ.360.53 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

**<u>திறந்து வைக்கப்பட்ட திட்டப் பணிகளின் விவரங்கள்</u>**

**வேலூர் புதிய பேருந்து நிலையம்**

வேலூரில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் 9.25 ஏக்கர் பரப்பளவில், ரூ.53.13 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள வேலூர் புதிய பேருந்து நிலையத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இப்புதிய பேருந்து நிலையம், 54 பேருந்து நிறுத்த தடங்களும், 41 நிலை நிறுத்த தடங்கள், 8 நகர பேருந்து தடங்கள், 82 கடைகள், 2 உணவகங்கள் மற்றும் இருசக்கர வாகனங்கள் நிறுத்துமிடம் ஆகிய வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது. மேலும், ஒரு வாகன நுழைவு வாயில் மற்றும் 2 வாகன வெளியேரும் வழிகளுடன், வெளியூர் பேருந்துகள், மாநகர பேருந்துகள் மற்றும் இதர வாகனங்களுக்கு தனியே வழிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் பயணிகள் காத்திருப்பு அறைகள், மின் தூக்கிகள், ஊனமுற்றோருக்கான கழிவறைகள், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, தீ அணைப்பு வசதிகள், சிசிடிவி கேமராக்கள், சோலார் மின்வசதி, உயர்மின் கோபுர விளக்குகள், மின் வாகனங்களுக்கான சார்ஜிங் அலகுகள் போன்ற வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளன.

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை**

வேலூர் ஊராட்சி ஒன்றியம், சேக்கனூர் ஊராட்சி தொடக்கப் பள்ளியில் 22.57 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள இரண்டு கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் கணியம்பாடி ஊராட்சி ஒன்றியம், நெல்வாய் ஊராட்சியில் கட்டப்பட்டுள்ள சமுதாய சுகாதார வளாகக் கட்டடம்;

காட்பாடி ஊராட்சி ஒன்றியம், வண்டறந்தாங்கல் ஊராட்சி, கிறிஸ்டியான் பேட்டையில் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடிக் கட்டடம், காட்பாடி ஊராட்சி ஒன்றியம், மெட்டுகுளம் ஊராட்சியில் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடிக் கட்டடம், அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியம், பின்னத்துரை ஊராட்சியில் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடிக் கட்டடம், என 31.48 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 3 அங்கன்வாடிக் கட்டடங்கள்;

அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியத்தில் 22.65 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஓங்கப்பாடி ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்தில் 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஊராட்சிகளுக்கான மாவட்ட வள மையக் கட்டடம், 20.57 இலட்சம் ரூபாய் செலவில் ஊசூர் ஊராட்சியில் கட்டப்பட்டுள்ள பால் கொள்முதல் மையக் கட்டடம் மற்றும் வேலூர் ஊராட்சி ஒன்றியம், அன்பூண்டி ஊராட்சியில் விமான நிலையச் சாலையில் கட்டப்பட்டுள்ள பயணிகள் நிழற்கூடம்;

வேலூர் ஊராட்சி ஒன்றியம், அத்தியூர் ஊராட்சியில் குருமலை கிராமம் மலைஅடிவாரம் முதல் குருமலை அரசுப் பள்ளி வரை 1 கோடியே 26 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் சாலையை பலப்படுத்தும் பணி;

**உயர்கல்வித் துறை**

உயர்கல்வித் துறையின் சார்பில் குடியாத்தம் அரசு திருமகள் ஆலைக் கல்லூரியில் 2 கோடியே 18 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 12 வகுப்பறைகளுடன் கூடிய தனிக் கட்டடம்;

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை**

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில் அணைக்கட்டு வட்டம், ஒடுக்கத்தூரில் 21 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்புக் கட்டடம் மற்றும் குடியாத்தம் வட்டம்,

வளத்தூரில் 21 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்புக் கட்டடம்;

**மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை**

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் வேலூர் அரசு மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரி வளாகத்தில் 2 கோடியே 17 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தீப்புண் சிகிச்சைப் பிரிவுக் கட்டடம்;

**தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை**

வேலூரில் 95 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மாவட்ட தோட்டக்கலை தகவல் மற்றும் பயிற்சி மையம்;

**தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்**

பேர்ணாம்பட்டு வட்டம், எருக்கம்பட்டில் 51 இலட்சத்து 28 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஆதிதிராவிடர் நல சமுதாய கூடம்;

**என மொத்தம் 62 கோடியே 10 இலட்சத்து 95 ஆயிரம் ரூபாய் செலவில் 17 முடிவுற்ற பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.**

**<u>அடிக்கல் நாட்டப்பட்ட திட்டப் பணிகளின் விவரங்கள்</u>**

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் 3 கோடியே 95 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள பேர்ணாம்பட்டு ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள 5 கோடியே 39 இலட்சத்து 53 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான 42 பணிகள், கீழ்வழித்துணையாங்குப்பம் ஊராட்சி ஒன்றியம், தொண்டான்துளசி ஊராட்சி, ராஜாதோப்பு கால்வாயில் 2 கோடியே 70 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள உயர்மட்டப் பாலம், குடியாத்தம் ஊராட்சி ஒன்றியம், மோர்தானா ஊராட்சியில் மோர்தானா –போடியப்பனூர் சாலையில் 4 கோடியே 93 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள உயர்மட்ட மேம்பாலம், 3 கோடியே 95 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள காட்பாடி ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடம்;

**இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை**

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் சார்பில் 10 கோடியே 81 இலட்சத்து 23 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் காட்பாடி உள்விளையாட்டு அரங்கம் கட்டும் பணி;

**கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை**

கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் மேல்பாடி மற்றும் அகரம்சேரி ஆகிய இடங்களில் 95.70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கால்நடை மருந்தகங்கள் கட்டும் பணிகள்;

**வேளாண்மை பொறியியல் துறை**

வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில் வேலூர் அரசு இயந்திர கலப்பை பணிமனை வளாகத்தில் 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வேளாண் இயந்திரங்களுக்கான கொட்டகை அமைக்கும் பணி;

**என மொத்தம் 32 கோடியே 89 இலட்சத்து 46 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டவுள்ள 50 புதிய திட்டப் பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

<u>பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட அரசு நலத்திட்டப் உதவிகள்</u>

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை**

இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்தின் கீழ் 1643 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள், சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 5484 பயனாளிகளுக்கு உதவிகள், 1900 பயனாளிகளுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகள், 1000 பயனாளிகளுக்கு பழங்குடியினர் சாதிச் சான்றுகள், 2 பயனாளிகளுக்கு கருணை அடிப்படையிலான பணி நியமன ஆணைகள், 1852 பயனாளிகளுக்கு உட்பிரிவு பட்டா மாறுதல்கள்;

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை**

பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் கீழ் 30 பயனாளிகளுக்கு வீடுகளுக்கான சாவிகள் வழங்குதல், வடகிழக்கு பருவமழையால் பாலாற்றில் ஏற்பட்ட வெள்ளத்தால் வீடு இழந்த 24 பயனாளிகளுக்கு வீடுகள், சமத்துவபுரம் வீடுகள் புரனமைத்தல்/சீரமைத்தல் பணிகளுக்கு நிதி ஆணை வழங்கும் திட்டத்தின்

கீழ் 195 பயனாளிகளுக்கு ஆணைகள் வழங்குதல், சமத்துவபுரத்தில் புதிய வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ் 5 பயனாளிகளுக்கு ஆணைகள் வழங்குதல்;

**வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை**

நுண்ணீர் பாசன திட்டத்தின் கீழ் 886 பயனாளிகளுக்கும், கூட்டுப் பண்ணை திட்டத்தின் கீழ் 1600 பயனாளிகளுக்கும், விசை தெளிப்பான் வழங்கும் திட்டத்தின் கீழ் 70 பயனாளிகளுக்கும் உதவிகள்;

**தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை**

தேசிய தோட்டக்கலை இயக்க திட்டத்தின் கீழ் சிப்பம் கட்டும் அறை, பண்ணைக்குட்டை அமைக்கும் திட்டம், மினி டிராக்டர் வழங்கும் திட்டம், நடமாடும் காய்கறி வண்டி வழங்கும் திட்டம், பெண் தொழில் முனைவோருக்கான காளான் வளர்ப்பு மையம் அமைக்கும் திட்டம், வரப்பு ஓரங்களில் பழச்செடிகள் நடும் திட்டம் போன்ற திட்டங்களின் கீழ் பயனாளிகளுக்கு உதவிகள்;

**வேளாண்மை பொறியியல் துறை**

கலைஞர் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் ஆழ்துளை கிணறுகள் அமைப்பதற்காக 156 பயனாளிகளுக்கு ஆணைகள் வழங்குதல்;

**பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை**

இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கும் திட்டத்தின் கீழ் 410 பயனாளிகளுக்கு பட்டாக்கள், 25 பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்கள், 40 பயனாளிகளுக்கு விலையில்லா தேய்ப்பு பெட்டிகள், முஸ்லீம் மகளிர் உதவும் சங்கத்தின் மூலம் ஏழை மகளிருக்கு சிறுதொழில் செய்ய நலத்திட்ட உதவிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 16 பயனாளிகளுக்கு உதவிகள், டாப்செட்கோ கடன் திட்டத்தில் 185 பயனாளிகளுக்கு கடனுதவி;

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை**

இலவச வீட்டு மனை பட்டா வழங்கும் திட்டத்தின் கீழ் 4874 பயனாளிகளுக்கு பட்டாக்கள், இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின் கீழ் 100 பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்கள், கறவை மாடு வழங்கும் திட்டத்தின் கீழ் 20 பயனாளிகளுக்கு கறவை மாடுகள்;

**மாற்றுத்திறனாளிகள் நலத்துறை**

இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கும் திட்டத்தின் கீழ் 21 பயனாளிகளுக்கு ஸ்கூட்டர்கள், 19 பயனாளிகளுக்கு மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்கள், 31 பயனாளிகளுக்கு பேட்டரியால் இயங்கும் சிறப்பு சக்கர நாற்காலிகள், முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்ட 19 பயனாளிகளுக்கு பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர், 31 பயனாளிகளுக்கு சக்கர நாற்காலிகள், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் 5 பயனாளிகளுக்கு நவீன செயற்கை கால், அனைத்து வகையான வங்கிக் கடனுதவி திட்டத்தின் கீழ் 2256 பயனாளிகளுக்கு கடனுதவிகள்;

**என பல்வேறு துறைகளின் சார்பில் மொத்தம் 30,423 பயனாளிகளுக்கு 360 கோடியே 53 இலட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.**

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் திரு. துரைமுருகன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு.எ.வ. வேலு, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. ஆர். காந்தி, வேலூர் மாநகராட்சி மேயர் திருமதி சுஜாதா ஆனந்தகுமார், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன், திரு. கதிர்ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. பி. கார்த்திகேயன், திரு.ஏ.பி. நந்தகுமார், திரு.அ.செ. வில்வநாதன், திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன், திருமதி அமுலு விஜயன், துணை மேயர் திரு. எம். சுனில் குமார், வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. பெ. குமாரவேல் பாண்டியன்,இ.ஆ.ப., உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

…………

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in